# தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச்சட்டம் 2008

பின்வரும் தமிழ்நாடு சட்டமன்றத்தின் சட்டமானது 26 மே 2008 ல் ஆளுநரின் ஒப்புதல் பெற்று பொது தகவலுக்காக வெளியிடப்பட்டுள்ளது.

2008 ன் எண் 31 வது சட்டம்.

மகளிர்க்கான ஆணையத்தை தமிழ்நாட்டில் அமைப்பதற்காக மற்றும் அதனுடன் தொடர்புடைய விஷயங்களை வழங்கும் சட்டம்.

தமிழ்நாடு சட்டமன்றத்தால் ஐம்பத்தி ஒன்பதாவது இந்திய குடியரசின் போது இயற்றப்பட்டது.

## அத்தியாயம்–I

## முன்னுரை

1. **(1)** இந்தச் சட்டம் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச்சட்டம் 2008 என்றழைக்கப்படும்.
   **(2)** இது தமிழ்நாடு முழுவதும் நீளப்பட்டுள்ளது.
   **(3)** இது அரசாங்கத்தின் அறிவிப்பின் நியமனத்தின் மூலம் நடைமுறைக்கு வரும்.
2. இந்தச் சட்டத்தின் அமைப்பைத் தவிர பிற தேவைகள்:
   (அ) ‘‘ஆணையம்’’ என்றால் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் பிரிவு 3ன் கீழ் அமைக்கப்பட்டது.
   (ஆ) ‘‘அரசாங்கம்’’ என்றால் மாநில அரசாங்கம்.
   (இ) ‘‘உறுப்பினர்’’ என்றால் ஆணையரகத்தின் உறுப்பினர் மற்றும் தலைவரும் உறுப்பினர் செயலாளரும் ஆவர்.
   (ஈ) ‘‘நபர்’’ என்பது ஒரு நிறுவனத்தையோ அல்லது பொது வேலையையோ அல்லது அரசாங்க நிறுவனத்தையோ அல்லது அரசாங்க நிதி பெறும் நிறுவனத்தையோ குறிக்கும்.
   (உ) ‘‘பரிந்துரை’’ என்பது விதிகளால் பரிந்துரைக்கப்பட்டது.
   (ஊ) ‘‘பெண்’’ என்றால் எல்லா வயதுடைய பெண்களையும் குறிக்கும்.

## அத்தியாயம்–II

## தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

3. **(1)** தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தவும் அதற்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்யவும் அரசாங்கத்தின் அறிவிப்பால் அமைக்கப்பட்டுள்ளது.
   **(2)** ஆணையத்தில் உள்ளவர்கள்,
   (அ) தலைவர்–பெண்களுக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மாண்புமிக்கப் பெண்.
   (ஆ) திறமையும் தகுதியும் வாய்ந்த ஐந்து உறுப்பினர்கள் பெண்களுக்காக பணியாற்றியவர்களாகவும் போதுமான அறிவுக்கூர்மை பெற்றவர்களாகவும் சட்டம் மற்றும் சட்டம் இயற்றலில் அனுபவம் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். தொண்டு நிறுவனங்கள் பற்றிய அறிவு சார்ந்தவர்களாகவும், பெண்களுக்கான பொருளாதார வளர்ச்சி, சுகாதாரம், கல்வி மேம்பாட்டிற்காக பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
   குறைந்தபட்சம் மூன்று பெண் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
   குறைந்தபட்சம் ஒரு நபராவது ஆதிதிராவிடராகவும் ஒரு நபர் பழங்குடியினருமாக நியமிக்கப்பட வேண்டும்.

(இ) குறைந்தப்பட்சம் இரண்டு நபர்களாவது அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

(ஈ) சமூகநலத்துறை மற்றும் சத்துணவு திட்டத்துறையின் செயலாளர் பதவி வழி (Ex-Officio member) உறுப்பினராக இருக்க வேண்டும்.

(உ) அரசாங்கத்தால் நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்–செயலாளர், அகில இந்திய ஆட்சிப்பணி அதிகாரியாக இருப்பவராகவும் இருக்க வேண்டும். அவர் பதவியில் அரசாங்கத்தின் இணை செயலாளரை விட குறைவான நிலையில் இருக்கக் கூடாது.

4. (1) அலுவலகத்தின் தலைவர் மற்றும் ஒவ்வொரு உறுப்பினரும் மூன்றாண்டு காலத்திற்குக் குறையாமல் அல்லது அரசாங்கத்தால் குறிப்பிட்டப்படி அலுவலகத்தில் பணியாற்ற வேண்டும்.
(2) அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்டபடி வெகுமானம் மற்றும் ஒதுக்கீடுகள் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும்.
(3) தலைவராக இருந்தால் தலைவர் அலுவலகத்திலிருந்தும் உறுப்பினராக இருந்தால் உறுப்பினர் அலுவலகத்திலிருந்தும் எந்த நேரத்தில் வேண்டுமானலும் தங்கள் பணியை எழுத்து மூலமாக ராஜினாமா செய்யலாம்.
(4) மேலே குறிப்பிடப்பட்ட உட்பிரிவு (1) எதைக் கொண்டிருந்தாலும் அரசாங்கத்தில் பணிபுரியும் தலைவரும்,உறுப்பினரும் பின்வருமாறு இருந்தால் அவர்களை அரசாங்கம் பணிநீக்கம் செய்யலாம்.

(அ) வெளியேற்றப்பட்ட திவாலானவர்.

(ஆ) குற்றத்திற்காக தண்டனை வழங்கப்பட்டுச் சிறைக்குச் சென்றவர். நீசத்தனம் புரிந்தவர்.

(இ) தகுதியுடைய வழக்கு மன்றத்தின்படி தெளிவான முடிவெடுக்க முடியாத மனவளர்ச்சிக் குன்றியவர்.

(ஈ) செயலாற்ற மறுப்பது அல்லது செயலாற்ற தகுதியற்றவர்.

(உ) அணையகத்தின் ஒப்புதல் பெறாமல் விடுப்பு எடுப்பது அல்லது தொடர்ந்து மூன்று அலுவலக கூட்டங்களுக்கு வராமல் இருப்பது.

(ஊ) அதிகார துஷ்பிரயோகம் செய்வது, பதவியில் இருக்கும்போது பொதுநலனுக்கு தீங்கு விளைவிப்பது.

மேலே குறிப்பிட்ட உட்பிரிவின்படி சம்பந்தப்பட்ட நபர் அவர் தரப்பில் உள்ள நியாயத்தை எடுத்துரைக்கும் வரை பணிநீக்கம் செய்யப்படுவார்.
(5) மேலே உள்ள உட்பிரிவு (3),(4) ல் குறிப்பிடப்பட்டபடி காலிப்பணியிடம் உருவானால் அரசாங்கத்தால் புது நபர் நியமிக்கப்படுவார். அவ்வாறு நியமிக்கப்படுபவர் ஏற்கனவே இருந்த நபரின் பணி காலத்திற்கு பணியாற்ற வேண்டும்.

தலைவர் பதவியைத் தவிர மற்ற பதவிக்கு குறிப்பிடப்பட்ட தேதிக்கு ஆறு மாதம் முன்னதாகவே ஏற்படும் காலிப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட மாட்டாது.

விளக்கம்– இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்ட ‘உறுப்பினர்’ என்ற வார்த்தை உறுப்பினர்–செயலாளரையும், பதவி வழி அலுவலக உறுப்பினரையும் குறிக்காது.

5. தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள் மாநிலத்தின் தலைவர் தற்காலிகமாக இல்லாத சூழ்நிலையிலும் தலைவர் நியமனத்தில் கால தாமதம் அல்லது தவறு ஏற்பட்டுள்ளது என்று நினைக்கும் காரணத்தினாலோ அல்லது ஆணையத்தின் உறுப்பினர் இல்லாத காரணத்தினாலோ ஆணையத்தின் நடைமுறையில் தொய்வுகள் இருப்பதாலோ ஆணையத்திலிருந்து கூட்டம் நடத்துவதையோ கூட்டம் நடைபெறும் அழைப்பாணையையோ

நிறுத்த இயலாது. ஆணையத்தின் அத்தனை நடைமுறைகள், செயல்முறைகள் செல்லத்தகாது என்று கூற இயலாது.

6. (1) இந்தச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் செயல்பாடுகளை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை அரசாங்கம் ஆணையத்திற்கு வழங்கும்.
(2) ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் பிற ஊழியர்களின் சம்பளம், இதரப்படிகள் மற்றும் பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டபடி.
(3) உட்பிரிவு (ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தலைவரின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இருப்பார்கள்.

## அத்தியாயம்–III

## ஆணையகத்தின்செயல்பாடுகள்

7. (1) தேசியப் பெண்கள் ஆணையச்சட்டம் 1990 இன் 10வது பிரிவின் கீழ் தேசிய பெண்கள் ஆணையத்தின் செயல்பாடுகளுக்கு உட்பட்டு, ஆணையம் பின்வரும் அனைத்து அல்லது ஏதேனும் செயல்பாடுகளைச் செய்யும்.

(1) அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்களின் கீழ் பெண்களின் பாதுகாப்புகள் தொடர்பான விசாரணை மேற்கொள்ளுதல் மற்றும் பரிசீலனை செய்தல்.
(2) ஆணையகம் பாதுகாப்புகளின் செயல்பாடுகள் குறித்த அறிக்கைகளை ஆண்டுதோறும் அரசாங்கத்திற்கு அனுப்புதல்.
(3) பெண்களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்காகவும், பாதுகாப்புகளைத் திறம்பட செயல்படுத்துவதற்கான அறிக்கையை உருவாக்க வேண்டும்.
(4) பெண்களைப் பாதிக்கும் சட்டங்களின் விதிமுறைகளை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து, அத்தகைய சட்டங்களில் ஏதேனும் குறைபாடுகள் அல்லது குறைபாடுகளைச் சந்திப்பதற்கான தீர்வு குறித்து சட்டமன்ற நடவடிக்கைகளை வழங்குவதற்காக திருத்தங்களைப் பரிந்துரைத்தல்.
(5) அரசியலமைப்பின் விதிகள் மற்றும் பெண்கள் தொடர்பான பிற அரசியலமைப்புச் சட்டங்களை மீறியதற்கான வழக்குகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலோசிக்க வேண்டும்.
(6) புகார்களை ஆராய்ந்து பின்வரும் விஷயங்கள் தொடர்பானவற்றில் சுயமாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(i) பெண்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கும் சமத்துவம் மற்றும் வளர்ச்சியின் நோக்கத்தை அடைவதற்கும் எந்தவொரு சட்டத்தையும் செயல்படுத்தாதது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(ii) கொள்கை முடிவுகளின் வழிகாட்டுதல்கள் அல்லது கஷ்டங்களைத் தணித்தல் மற்றும் நலனை உறுதி செய்தல் மற்றும் பெண்களுக்கு நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்ட அறிவுறுத்தல்கள் மற்றும் அத்தகைய விஷயங்களில் எழும் பிரச்சனைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலோசிப்பது.

(7) பெண்களுக்கு எதிரான பாலின பாகுபாடு மற்றும் கொடுமைகளால் எழும் குறிப்பிட்ட பிரச்சினைகள் அல்லது சூழ்நிலைகள் குறித்து சிறப்பு ஆய்வுகள் அல்லது விசாரணைகளுக்கு அழைப்பு விடுவது மற்றும் அவற்றை ஒழிப்பதற்கான வழிகளைப் பரிந்துரைப்பது.
(8) பெண்களை ஊக்குவித்தல் மற்றும் கல்வி ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல் மற்றும் அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்கேற்பை உறுதி செய்தல் மற்றும் வீட்டுவசதி மற்றும் அடிப்படை சேவைகளுக்கான வசதியின்மை போன்ற முன்னேற்றத்தினை

தடுக்கும் காரணிகளை கண்டறிதல். தொழில்நுட்பம் மற்றும் ஆதரவு சேவைகள் இன்மை மற்றும் தொழில்சார் சுகாதார அபாயம் போன்றவைகளுக்கான காரணங்களை அறிதல் மற்றும் உற்பத்தியைப் பெருக்குதல்.

(9) பெண்களின் சமூக–பொருளாதார வளர்ச்சிக்கான திட்டமிடலுக்குப் பங்கேற்று ஆலோசனை வழங்குதல்.

(10) பெண்களின் வளர்ச்சியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவது.

(11) பெண்கள் சிறை கைதிகளாக வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை, மகளிர் நிறுவனம் அல்லது பெண்கள் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள வேறு இடங்களை ஆய்வு செய்தல் மற்றும் அவசியம் ஏற்படின் உரிய விஷயங்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி தகுந்த நடவடிக்கை எடுத்தல்.

(12) பெண்களைப் பாதிக்கும் நிதி தொடர்பான வழக்குகளை ஆராய்தல் மற்றும் பரிசீலனைக்கு உட்படுத்துதல்.

(13) பெண்கள் வாழும் கடினமான சூழலையும் அவர்களுக்குக் கஷ்டங்களை ஏற்படுத்தும் விஷயங்களையும் ஆராய்ந்து அவ்வப்போது அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்துதல்.

(14) மேலும் அரசாங்கத்தால் ஆணையகத்திற்குப் பரிந்துரைக்கப்பட்ட மற்ற விஷயங்கள்.

(2) பிரிவு (1) உட்பிரிவு (i) அல்லது பிரிவு (6) உட்பிரிவு (i) இல் குறிப்பிடப்பட்ட எந்த விஷயத்தையும் விசாரிக்கும் பொழுது ஆணையரகத்திற்கு சிவில் நீதிமன்றத்தின் 1908 இன் சிவில் செயல்முறைகளின்படி எல்லா உரிமையும் உள்ளது.

(அ) அழைப்பாணை மூலம் ஒரு நபரின் வருகையை உறுதி செய்தல், பரிசீலித்தல் மற்றும் சத்தியபிரமாணம் மேற்கொள்ளச் செய்தல்.

(ஆ) ஆவணத்தின் உற்பத்தி மற்றும் கண்டுபிடிப்புத் தேவைகள்.

(இ) பிரமாண பத்திரங்களின் சான்றுகளைப் பெறுதல்.

(ஈ) நீதிமன்றத்திலிருந்து அல்லது பொதுப்பதிவிலிருந்து ஆவணங்கள் கோருதல்.

(உ) சாட்சி மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்வது.

(ஊ) பரிந்துரைக்கப்பட்ட மற்ற விஷயங்கள்.

(3) ஆணையம் ஒரு விஷயத்தை ஆய்வு செய்த பிறகு அதன் அடிப்படை ஆதாரங்கள் திருப்திகரமாக இருந்தால் அதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளான காவல்துறை மற்றும் அதை சார்ந்த அதிகாரிகளிடம் கூறி சட்டத்தின்படி தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளச் செய்தல்.

(4) உட்பிரிவு (1) இன் கீழ் பரிந்துரைகளை வழங்குவதற்காக இந்தச் சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட எந்தவொரு குழு, வேறு அமைப்பினரால் அல்லது நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட ஆலோசனையையும் சட்டம் செயல்படுத்துவதற்கு முன் தேதியில் ஆணையம் பரிசீலிக்கலாம் அல்லது ஏற்றுக்கொள்ளலாம்.

(5) துணைபிரிவு சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டிய நடவடிக்கைஅல்லது முன் மொழியப்பட்ட நடவடிக்கை ஆகியவற்றை விளக்கும் ஒரு அறிக்கை மாநிலம் தொடர்பான பரிந்துரைகள், மேற்கண்ட நடவடிக்கைகள், ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் அதற்கான காரணங்கள் குறித்து அறிக்கை அளித்தல்

8. (1) ஆணைக்குழு, அவ்வப்போது ஏற்படும் ஒரு புதிய சிக்கல்களைக் கையாள்வதற்குத் தேவைக்கேற்ப குழுக்களை நியமிக்கலாம்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையில் ஆணையத்தில் உறுப்பினராக இல்லாத புதிய நபர்களை ஆணையம் நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்படும் நபர்கள் சரியானவர்கள் என்று கருதினால் ஆணையத்தால் நடத்தப்படும் கூட்டங்களில் பங்குகொள்ளலாம். மற்றும் பிற வேலைகளிலும் பங்கு கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கு ஓட்டு போடும் உரிமை கிடையாது.

(3) அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் ஆணைக் குழுவின் கூட்டத்தில் பங்குபெற்றதற்கான இதரப்படிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

9. (1) ஆணைக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது தேவைப்படும் பொழுது, தலைவர் நினைக்கும் நேரத்திலும் இடத்திலும் கூட்டங்கள் நடத்தலாம்.

(2) ஆணைக்குழு அதன் சொந்த நடைமுறை மற்றும் அதன் குழுக்களின் நடைமுறைகளை ஒழுங்குபடுத்தலாம்.

(3) ஆணைக்குழுவின் அனைத்து உத்தரவுகளும் முடிவுகளும் உறுப்பினர்–செயலாளர் அல்லது உறுப்பினர்–செயலாளரால் தனக்கு பதிலாக நியமிக்கப்பட்ட அதிகாரியால் அங்கீகரிக்கப்படும்.

10. (1) ஆணைக்குழு இந்தச்சட்டத்தின் கீழ் விசாரணை நடத்துவதற்குப் பின்வருவனவற்றைப் பயன்படுத்தலாம்.

(அ) ஏதாவது ஒரு அதிகாரி அல்லது மாநில அரசின் விசாரணை நிறுவனத்தைப் பயன்படுத்தலாம்.

(ஆ) ஏதாவது ஒரு நபர்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பிடபட்டப்படி எந்தவொரு அதிகாரி அல்லது நிறுவனம் அல்லது நபர் ஆணைக்குழுவால் விதிக்கப்பட்டபடி விசாரணை நடத்தி அந்த அறிக்கையை ஆணைக்குழுவால் குறிப்பிடப்பட்ட தேதியில் ஆணையகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

## அத்தியாயம்–IV

## நிதி கணக்குகள் மற்றும் தணிக்கைகள்

11. (1) அரசாங்கம் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு ஏற்றது என்று கருதும் பணத்தை மானியங்கள் மூலம் ஆணையத்திற்கு வழங்கலாம்.

(2) இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் செயல்பாடுகளுக்கு பொருத்தம் என்று கருதினால் அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்ட தொகையை அந்தக் காரியங்களுக்காக ஆணையரகம் செலவிடலாம்.

(3) தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கக்கூடிய மதிப்பூதியம், இதரப்படிகள், நிர்வாகச் செலவுகள் உறுப்பினர்–செயலாளருக்கு, அதிகாரிகளுக்கு மற்றும் இதர பணியாளர்களுக்கு பகுதி–6 ல் குறிப்பிடப்பட்டப்படி ஓய்வூதியம் மற்றும் பிரிவு–8 பகுதி 3 ல் குறிப்பிடப்பட்டபடி இதரப்படிகள் உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் படி வழங்கப்படும்.

12. (1) ஆணையத்தின் கணக்குகள் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும். ஆணைக்குழு பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் உரிய கணக்குகளின் ஆண்டு அறிக்கையைத் தயாரிக்க வேண்டும்.

(2) அரசாங்கத்தின் சார்பாக நியமிக்கப்பட்ட தணிக்கையாளரைக் கொண்டு ஆணைக்குழுவின் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

(3) உட்பிரிவு (2) இன் கீழ் நியமிக்கப்பட்ட தணிக்கையாளருக்கு தணிக்கை நோக்கங்களுக்காகப் பரிந்துரைக்கப்பட்டபடி உரிமைகள், சலுகைகள் மற்றும் அதிகாரம் வழங்கலாம்.

(4) உறுப்பினர்–செயலாளர் தணிக்கை அறிக்கைகளை அச்சிட்டு ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்புவார். அவ்வாறு அச்சிடப்பட்ட கணக்குகள் அடுத்து நடைபெறும் ஆணைக்குழு கூட்டத்தில் பரிசீலனைக்காக வைக்கப்படும்.

(5) தணிக்கை அறிக்கையில் ஏதேனும் குறைபாடுகள், முறைகேடுகள் சுட்டிக்காட்டப்பட்டால் ஆணைக்குழு அதன்மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும்.

(6) தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட ஆணைக் குழுவின் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கைகள் போன்றவை அரசாங்கம் குறிப்பிட்ட காலகெடுவுக்குள் ஆணையத்தின் குறிப்புகளுடன் அரசாங்கத்திற்கு அனுப்பப்படும்.

(7) தணிக்கை அறிக்கையில் உள்ள குறைகளை அரசாங்கம் எழுத்து மூலமாக சுட்டிக்காட்டினால் ஆணைக்குழு அந்த அறிவுரையை ஏற்று குறைகளை நிவர்த்தி செய்து அரசாங்கம் குறிப்பிட்ட நேரத்திற்குள் குறைகளை நிவர்த்தி செய்து அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

13. ஒவ்வொரு நிதியாண்டிலும், ஆண்டு தணிக்கை அறிக்கையை பரிந்துரைக்கப்பட்டபடி தயார் செய்ய வேண்டும். மற்றும் முந்தைய நிதியாண்டின் அனைத்து செயல்பாடுகளையும் உள்ளடக்கிய கணக்கு அறிக்கையையும் தயார் செய்து அதை அரசாங்கத்திற்கு பார்வைக்கு அனுப்புதல் வேண்டும்.
14. அரசாங்கம் ஆண்டு அறிக்கையை சட்டமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் முன்பு அரசாங்கம் ஆண்டு அறிக்கையுடன் அனைத்து பரிந்துரைகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் , தணிக்கை அறிக்கையின்குறை நிவர்த்தி அறிக்கையுடனும் விரிவான முறையில் சமர்ப்பிக்க வேண்டும்.

## அத்தியாயம்–V

## இதர விவரங்கள்

15. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 21 ன் படி தலைவரோ, உறுப்பினர்களோ, அதகாரிகளோ அல்லது பிற பணியாளர்களோஇந்தச் சட்டத்தின்படி அரசு ஊழியர்களாக தொடர்வார்கள்.
16. தனிநபர் ஒருவர், அல்லது ஆணையத்தில் அல்லது அதிகாரிகளிடத்தில் அல்லது மேலே 10வது பிரிவு, உட்பிரிவு (1) இல் சொல்லப்பட்ட ஆணையம் சார்ந்த பொறுப்பாளிகளிடமோ கொடுக்கும் வாக்குமூலமானவை, அது தனி நபருக்கு எதிராகவோ குற்றம் கூறும் வழக்குகளிலோ அல்லது சிவில் வழக்கு மேல் பயன்படுத்தப்படும் அதே நேரத்தில் தவறான சாட்சியங்களில் அவ்வாக்குமூலம் பயன்படுத்தப்படாது என்பதும் தெளியப்பட வேண்டும்.

    (அ) மேற்கூறிய தனிநபர் வாக்குமூலம் ஆணையத்தாலோ, அதிகாரிகளாலோ, அல்லது ஆணையம் சார்ந்த பொறுப்பாளராலோ கேட்கப்பட்ட கேள்விக்கு தக்க பதிலாக அமையும் பட்சத்திலும்,

    (ஆ) புலன் விசாரணைக்கு தொடர்புடைய பொருளுடை ஒத்திவைப்பு உள்ள நிலையிலும் மட்டுமே மேற்சொன்னவை ஏற்புடையதாகும்.
17. மேலும் இன்னும் உற்றுநோக்கினால் ஆணையத்தின் அதிகார கூறுபாடுகள் மேல் சொன்ன வசதிகளுக்கு உரம்/உறுதி சேர்ப்பது, தற்போதுள்ள எவ்வித சட்டத்தின் பலத்தையும் சிதைக்காததாய் இருப்பதே இதன் அடித்தளமாகும்(நோக்கமாகும்).
18. இந்த ஆணையத்தின் எந்த உறுப்பினருக்கோ அல்லது அதிகாரிக்கோ, அலுவலருக்கோ அல்லது அரசின் கீழோ ஆணையத்தின் கீழ் செயல்படும் எந்தவோரு நபருக்கும் எதிராக எவ்வித குற்றமுறு வழக்குகளோ அல்லது வழக்குகளோ அல்லது குற்றச்சாட்டுக்களோ இருத்தல் கூடாது. அத்தகு நற்செயல், நல்லெண்ணம் அடிப்படையிலேயே ஆணையத்திற்கு

அரசின் அங்கீகாரம் வழங்கப்படும் நிலையில் அதற்கான விதிமுறைகளும் சட்டப்பிரிவுகளும் ஆணைகளிலும் பகுத்தறிந்து வகுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன என்பது வெளிப்படையாகும்.

19. ஆணையகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், விதிமுறைகளை அமல்படுத்துவதில் அல்லது நடைமுறைப் படுத்துவதில் சிக்கல் ஏற்படும் போது அரசு தலையிட்டு அரசாங்கத்தால் பதிவு பெற்ற நாளிதழில் அதிகாரிகளும், ஆணையமும் தடையின்றி செயல்படுவது எவ்வளவு இன்றியமையாதது என்பதை நிலை நிறுத்த வேண்டும். அரசாங்கமானது தமிழக அரசின் அரசிதழில் ஆணை வெளிப்பட்டுச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு முரணானது அல்ல என்பதை வெளிப்படுத்தி சிக்கல்களை அகற்றுவதற்கு அவை பயனுள்ளவை என்பதையும் உணர்த்த வேண்டும்.

இந்த சட்டம் நடைமுறைக்கு வந்து இதன் முடிவு காலமான இரண்டாண்டுகளுக்குப் பின் மேலே குறிப்பிட்டபடி ஆணையிட முடியாது.

20. (1) இந்தச் சட்டத்தின் அனைத்து அல்லது ஏதேனும் சில நோக்ககங்களை நிறைவேற்ற அரசாங்கம் விதிகளை உருவாக்கலாம்.

(2) மேற்கூறிய அதிகாரத்தின் பொதுவான தன்மைக்கு குறிப்பாக எந்தவித பாரபட்சமும் இல்லாமல் விதிகளை பின்வரும் அனைத்து அல்லது ஏதேனும் விஷயங்களுக்கு வழங்கலாம்.

(அ) பிரிவு 4 ன் உட்பிரிவு (2) ன் படி தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் மதிப்பூதியம் மற்றும் இதரப்படிகள், தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணிகளுக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பிரிவு 6 ன் உட்பிரிவு (2) ன் படி அலுவலர் மற்றும் இதர பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் இதரப்படிகள்.

(ஆ) பிரிவு 8 உட்பிரிவு (3) ன் படி இணைந்த நபர்களுக்கு (co-opted persons) குழுவின் கூட்டங்களுக்குச் சென்றதற்கான படிகள்.

(இ) பிரிவு 12 ன் உட்பிரிவு (1) ன் படி முறையான படிவம் மற்றும் வடிவத்தில் தயாரிக்கப்படும் கணக்குகளுக்கான ஆண்டு அறிக்கை.

(ஈ) பிரிவு 13 இன் கீழ் வருடாந்திர அறிக்கை தயாரிக்கப்படும் படிவம் மற்றும் நேரம்.

(உ) இந்தச் சட்டத்தின் கீழ் தேவைப்படும் அல்லது பரிந்துரைக்கப்பட கூடிய வேறு விஷயங்கள்.

(3) (அ) இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அனைத்து விதிகளும் தமிழக அரசு அரசிதழில் வெளியிடப்படும். அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய தேதி குறிப்பிடாமல் இருப்பின் எந்த தேதியில் அரசிதழ் வெளி வருகிறதோ அந்த தேதியில் இருந்து நடைமுறைப்படுத்தியதாகக் கருதப்படும்.

(ஆ) இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளும் தமிழக அரசு அரசிதழில் வெளியிடப்படும். அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய தேதி குறிப்பிடாமல் இருப்பின் எந்த தேதியில் அரசிதழ் வெளி வருகிறதோ அந்த தேதியில் இருந்து நடைமுறைப்படுத்தியதாகக் கருதப்படும்.

(4) இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அல்லது அறிவிப்பும் பிரிவு 19 ன் கீழ் சட்டமன்ற சபையின் மேசையில் அமர்வின் காலத்தில் வைக்கப்பட வேண்டும். இல்லையென்றால் அடுத்த அமர்வில் வைக்கப்பட வேண்டும். சட்டமன்றத்திற்கு விதியிலும் அறிவிப்பிலும் மாற்றத்தைக் கொண்டு வரும் அதிகாரம் உண்டு. விதிகள், அறிவிப்புகள், கட்டளைகள் ஆகியவற்றிக்கு உத்தரவு வழங்குவதைச் சட்டமன்றம் தீர்மானிக்கிறது. சட்டமன்றத்தால் செய்யப்பட்ட மாற்றங்கள் மற்றும் தீர்மானங்கள் எந்தவித பாரபட்சமின்றி இருக்கும். ஏற்கனவே திருத்தியமைக்கப்பட்ட விதிகள் மற்றும் ஆணைகள், அறிவிப்புகளை செல்லுபடியாக்கும் அதிகாரம் சட்டமன்றத்திற்கு உண்டு.

(அரசாங்கத்தின் ஆணைப்படி)